# கோபத்தின் சத்தத்தில் கொந்தளிக்கும் சங்கீதங்கள்

**மற்றவரைச் சபிக்கும் சங்கீதங்கள் வேதாகமத்தில் இருப்பது ஏன்?**

**வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீதப் புத்தகத்தில் பக்தர்களின் மனதில் உருவான சகலவிதமான உணர்வுகளும் பாடல்களாக உள்ளன.[1] இதனால்தான், இப்புத்தகத்தில் ஏறக்குறைய இருபத்து ஐந்து பாடல்களில் மனிதர்களுடைய கோப உணர்வுகள் வெளிப்பட்டுள்ள வசனங்கள் உள்ளன.[2] இவற்றில் எட்டு சங்கீதங்களில், சகல வசனங்களிலும் கோபக் குமுறல்கள் முழுமையாக வெளிப்பட்டுள்ளன (சங்.7, 35, 58, 59, 69, 83, 109, 137).[3] இதனால், வேதாகமத்திலேயே மிகவும் கடுமையான வார்த்தைகளைக் கொண்டுள்ள பாடல்களாக இச்சங்கீதங்கள் உள்ளன.[4] இதனால், இவை "மற்றவரை சபிக்கும் சங்கீதங்கள்" (Imprecatory Psalms) என்று அழைக்கப்படுகின்றன. ஆனால், "கோப சங்கீதங்கள்" (Psalms of Anger) என்னும் பெயரே இவற்றுக்குப் பொருத்தமானது என்று சில ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள போதிலும், "சபிக்கும் சங்கீதங்கள்" என்னும் பெயரே கிறிஸ்தவ உலகில் பிரபலமாகியுள்ளது.[5] உண்மையில், இவை, நியாயத்தீர்ப்பை அல்லது அழிவைக் கொண்டுவரும்படி தேவனிடம் முறையிடும் மன்றாடுதல்களாக உள்ளன.[6] இதனால், பக்தர்களின் கோபமும் வெறுப்பும் வெளிப்பட்டுள்ள இத்தகைய சங்கீதங்களில், எதிரிகளைக் கடுமையாகச் சபிக்கும் வார்த்தைகள் உள்ளன.

சங்கீதக்காரர்கள், தங்களுடைய எதிரிகள் அழிந்துபோகவேண்டும் என்னும் எண்ணத்துடன், "அவன் நினையாத அழிவு அவனுக்கு வரவும், அவன் மறைவாய் வைத்த வலை அவனையே பிடிக்கவுங்கடவது. அவனே அந்தக் குழியில் விழுந்து அழிவானாக" (சங்.35:8) என்றும், "அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன்" (சங்.109:8) என்றும், "தேவனே அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப் போடும்" (சங்.58:6) என்றும், "மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக. அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக" (சங்.55:15) என்றும், "ஆண்டவரே அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்து போகப்பண்ணும்" (சங்.55:9) என்றும், "அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும். இனி இராதபடிக்கு நிர்மூலமாக்கும்" (சங்.59:13) என்றும், "உம்முடைய உக்கிரத்தை அவர்கள் மேல் ஊற்றும். உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக" (சங்.69:24) என்றும் குறிப்பிட்டுள்ளனர். 137ம் சங்கீதத்தில், தங்களைச் சிறைப்படுத்திய பாபிலோனியர்களின் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்" என்று யூதர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[7] 109ம் சங்கீதத்தில், தன்னுடைய எதிரியும் அவனுடைய குடும்பமும் பாதிக்கப்பட வேண்டும் என்று சங்கீதக்காரன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளான்:

> அவனுக்கு மேலாகத் துஷ்டனை வையும். சாத்தான் அவன் வலது பக்கத்தில் நிற்பானாக. அவன் நியாயம் விசாரிக்கப்படும்போது குற்றவாளியாகக்கடவன். அவன்

---

[1] T.Longman III, *Psalms: Tyndale Old Testament Commentaries*, p. 51; K.Schaefer, *Psalms: Studies in Hebrew Narrative and Poetry*, p. xxxviii

[2] A.Luc, "Interpreting the Curses in the Psalms" pp. 95-396.

[3] D.J.Estes, *Handbook on the Wisdom Books and Psalms*, p. 172.

[4] J.E.Kalas, *Longing to Pray: How the Psalms Teach Us to Talk with God*, p. 100.

[5] C.H.Bullock, *Encountering the Book of Psalms*, p. 228.

[6] W.C.Kaiser, F.F.Bruce & M.T.Brauch, *Hard Sayings of the Bible*, p. 280.

[7] இச்சங்கீதத்தின் முழுமையான விளக்கத்திற்கு எனது, "புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்" என்னும் நூலைப் பார்க்கவும்.

ஜெபம் பாவமாகக்கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும், அவன் மனைவி விதவையுமாகக்கடவர்கள். அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து, தங்கள் பாழான வீடுகளிலிருந்து இரந்துண்ணக்கடவர்கள். கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வானாக. அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக்கொள்ளக்கடவர்கள். அவ னுக்கு ஒருவரும் இரக்கங் காண்பியாமலும், அவனு டைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவு செய்யாமலும் போவார்களாக. அவனது சந்ததியார் நிர்மூலமாகக்கட வர்கள். இரண்டாந் தலைமுறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக. அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக்கடவது. அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக. அவைகள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கக்கடவது. அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாவதாக (சங்கீதம் 109:9-15).

மற்றவர்களைக் கடுமையாகச் சபிக்கும் வசனங்கள் உள்ள சங்கீதங்களைப்பற்றி பல்வேறுவிதமான விளக்கங்கள் கிறிஸ்தவர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், எதிரிகள்மீது தெய்வத்தின் தண்டனையை வருவிப்பதற்காக அக்கால மக்கள் செய்த மந்திரச் செயலின் வார்த்தைகளாக இச்சங்கீதங்கள் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.[8] ஆனால் அக்கால புறஜாதி மக்கள் மத்தியில் இருந்தவிதமாக எதிரியைப் பழிவாங்கும் அம்சங்கள் இச்சங்கீதங்களில் இல்லாதிருப்பதினால் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.[9] இதைப்போலவே, இச்சங்கீதங்கள் பாவியான மனிதர்களுடைய தீமையான வார்த்தைகள் என்னும் சிலரது விளக்கமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. அதாவது, "சங்கீதக்காரர்களும் பாவியான மனிதர்கள் என்பதனால் அவர்கள் இவ்விதமாகத் தீய வார்த்தைகளை உபயோகித்துள்ளனர்"[10] என்று இவர்கள் கூறினாலும், இச்சங்கீதங்கள் பழிவாங்கத் துடிக்கும் கட்டுப்படுத்தமுடியாத கோபக்குமுறல்களாக அல்ல, தேவனை நம்பிய பக்தர்களின் உள்ளத்திலிருந்து வெளிவந்த கசப்பான வார்த்தைகளாகவே உள்ளன.[11] இதனால், "கவிதை நடையில் எழுதப்பட்டுள்ள இச்சங்கீதங்களில் மனித உணர்வுகள் மிகைப்படுத்தப்பட்ட நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளன"[12] என்னும் விளக்கமும் தவறாகவேயுள்ளது.

சங்கீதங்களை எழுதியவர்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதினால், "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, சூட்டுக்குச் சூடு" என்னும் அக்கால முறையின்படி (யாத்.21:24, உபா.19:21) அவர்கள் ஜெபித்துள்ளதாகச் சிலர் கருதுகின்றனர்.[13] இதனால் இத்தகைய ஜெபம், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்திற்குப் பொருத்தமற்றது என்றும்,[14] இவ்வாறு ஜெபிக்கும்முறை பழைய ஏற்பாட்டுக்கால நியாயப்பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டது என்றும் இவர்கள் கூறுகின்றனர்.[15] எதிரிகளை நேசிப்பதும், துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபிப்பதும் கிறிஸ்தவத்தின் அடிப்படை அம்சங்களாக இருப்பதினால் (மத்.5:44),[16] மற்றவரைச் சபிக்கும்

---

[8] S. Mowinckel, *The Psalms in Israel's Worship Volume 2*, p. 49.

[9] C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, p. 139.

[10] P.C.Craigie, *Psalms 1-50: Word Biblical Commentary*, p. 41.

[11] K.Schaefer, Psalms, p. xxxix.

[12] G.Mc Conille, "The Psalms: Introduction and Theology" p 53.

[13] G.A.F.Knight, *Psalms Volume 2: The Daily Study Bible*, p. 315.

[14] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 767; J.Eaton, *The Psalms: A Historical and Spiritual Commentary*, p. 456.

[15] A.F.Kirkpatrick, *Psalms: Cambridge Bible for Schools and Colleges*, p. Ixxxix.

[16] மத்தேயு 5:44ல், "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத் துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

சங்கீதக்காரனின் ஜெபம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளமுடியாத கோபக்குமுறல்களாகவே இருப்பதாகப் பலர் எண்ணுகின்றனர்.

பொதுவாகக் கிறிஸ்தவர்கள் நினைப்பதுபோல, பழைய ஏற்பாடு அன்பற்ற கடுமையான புத்தகம் அல்ல. ஏனெனில், புதிய ஏற்பாட்டைப்போலவே பழைய ஏற்பாட்டிலும் மற்றவரை நேசிக்கும்படியும், மற்றவர்கள் தீமை செய்தாலும் அதற்குப் பதிலாகத் தீமை செய்யாமல் நன்மை செய்யும்படியும், பழிவாங்குதலைத் தவிர்க்கும்படியும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன (யாத்.23:4-5, லேவி.19:18, நீதி.20:22).[17] எனவே, பழைய ஏற்பாட்டுக்கால மக்களும், புதிய ஏற்பாட்டு அன்பின் ஒழுக்க விதிமுறையின்படி வாழவேண்டியவர்களாகவே இருந்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.[18] ஏனெனில், பழைய ஏற்பாட்டிலுள்ள "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்னும் நடைமுறை அக்கால நீதிமன்றங்களில் உபயோகிக்கப்படுவதற்காகக் கொடுக்கப்பட்ட சமூக சட்டமாகவே இருந்தது.[19] இதனால் இது, மக்களின் அன்றாட வாழ்க்கைமுறைக்கான கட்டளையாக இருக்கவில்லை. உண்மையில், "வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் மனிதனுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கான ஒழுக்கக் கட்டளைகள் ஒரேவிதமானவையாகவே உள்ளன."[20]

மற்றவர்களைச் சபிக்கும் வார்த்தைகள் உள்ள சங்கீதங்களைப் பழைய ஏற்பாட்டுக்கால வாழ்க்கை முறையின்படியானது என்று கூறுவது தவறாகும்.[21] ஏனெனில், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும், கிறிஸ்தவர்கள் இதைப்போன்ற கடுமையான வார்த்தைகளை உபயோகித்துள்ளனர் (கலா.1:8-9, 1கொரி.16:22).[22] இயேசுகிறிஸ்துவும் தம்முடைய ஊழியப்பணிக்கு எதிரானவர்களையும், தம்மை விசுவாசியாதவர்களையும் கடுமையான வார்த்தைகளில் சபித்துள்ளார் (மத். 11:20-23, 23:13-15, 23:19, 23:23, 23:25-27, 23:29, 23:38).[23] சில சந்தர்ப்பங்களில் அவர் கோபத்துடன் பேசியும் செயல்பட்டும் உள்ளார் (மாற்.3:5, யோவா.2:13-17).[24] மேலும், இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் மற்றவரைச் சபிக்கும் வார்த்தைகள் உள்ள சங்கீதங்களையும் தமது வாழ்வுச்

---

[17] யாத்திராகமம் 23:4-5ல், "உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதை யாவது தப்பிப்போகக் கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டு போய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக" என்றும், லேவி யராகமம் 19:18ல், "பழிக்குப் பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர் மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக" என்றும், நீதிமொழிகள் 20:22ல், "தீமைக்குச் சரிகட்டுவேன் என்று சொல்லாதே" என்றும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

[18] C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, p. 140.

[19] C.Wright, *Deuteronomy: New International Biblical Commentary*, pp. 224-226; E.H.Merrill, *Deuteronomy: The New American Commentary*, p. 279.

[20] J.L.McKenzie, "The Imprecations of the Psalter" p. 83.

[21] T.Longman & P.Enns, *Dictionary of the OT Wisdom Poetry & Writings*, p. 317.

[22] கலாத்தியர் 1:8-9ல், "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன். நீங்கள் ஏற் றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்றும் 1கொரிந்தியர் 16:22ல் "ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்றும் பவுல் குறிப்பிட்டுள்ளார்.

[23] மத்தேயு 11:21-23ல், "கோராசினே உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே உனக்கு ஐயோ.. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்" என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார். மேலும், மத்தேயு 23ம் அதிகாரத்தில் பல தடவைகள், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ... குருடரான வழிகாட்டிகளே உங்களுக்கு ஐயோ..." என்றும் (மத்.23:13-15,19,23,25-27,29), "மதிகேடரே குருடரே என்றும் (மத்.23:17,19), "சர்ப்பங்களே விரியன் பாம்புக்குட்டிகளே" என்றும் (மத்.23:33) கடிந்து கொண்டுள்ளதோடு "இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கி விடப்படும்" (மத்.23:38) என்றும் சபித்துள்ளார்.

[24] மனிதருடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்ததாக மாற்கு 3:5 கூறுகிறது. மேலும், இயேசுகிறிஸ்து ஆலயத்தைச் சுத்திகரித்தது, அவர் கோபத்தில் செய்த செயலாகவே உள்ளது (யோவா.2:13-17). எனினும், இயேசுகிறிஸ்துவின் கோபம் எப்பொழுதும் நீதியானதாகவே இருந்தது.

சூழ்நிலைகளில் உபயோகித்துள்ளனர்.[25] இதனால், மற்றவர்களைச் சபிக்கும் சங்கீதங்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு மட்டுமானது என்று கூறமுடியாது. எனினும், எதிரிகளை நேசிக்கும்படியும், சபிப்பவர்களை ஆசீர்வதிக்கும்படியும் அறிவுறுத்திய இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர் களும் (மத்.5:44, ரோ.12:14, 1பேது.3:9),[26] மற்றவர்களைக் கடுமையான வார்த்தைகளில் சபித்துள்ளது அநேகருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும், பாவத்தில் வாழ்பவர்களையும், மனந்திரும்பாத கடின இருதயமுள்ளவர்க ளையும், பாவ மன்னிப்பையும் நித்திய வாழ்வையும் அருளும் சுவிசேஷத்தை நிராகரித்தவர்களை யுமே சபித்துள்ளனர். இயேசுகிறிஸ்துவையும், அவர் அருளும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நிராகரிப்பவர்கள் தேவனுடைய சாபத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பதனால் (யோவா.3:18, 3:36),[27] இத்தகைய மக்களைச் சபிப்பது அவர்களுடைய இறுதிநிலையை அவர்களுக்கு அறிவிக்கும் செயலாகவே உள்ளது.

கோப உணர்வுகளை வெளிப்படுத்தும் சங்கீதங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியற்ற தன்மையைக் காண்பிக்கின்றன என்னும் சிலரது கருத்தும் தவறாகும். ஏனெனில், அதிக பக்தியையும் ஆவிக்குரிய முதிர்ச்சியையும் வெளிப்படுத்தும் சங்கீதங்களிலும் மற்றவர்களைச் சபிக்கும் வார்த்தைகள் உள்ளன (சங்.139:19-22). மேலும், “இயேசுகிறிஸ்துவின் மறுவருகைக்காக ஜெபிப்பது அவருடைய வருகை யோடு உலகின்மீது வரவிருக்கும் அழிவையும் (2தெச.1:7-8) கொண்டுவரும்படி கேட்பதையும் உள்ளடக்கியுள்ளது. இதை நாம் வெளிப்படையாக நமது ஜெபத்தில் குறிப்பிடாவிட்டாலும், சங்கீதக்காரரைப்போலவே நாமும், கிறிஸ்தவர்களாகிய நமக்கும் தேவனுக்கும் எதிராகச் செயற்படும் மக்கள்மீது அழிவைக் கொண்டுவரும்படி கேட்கிறவர்களாகவே இருக்கின்றோம்.”[28] மேலும், தேவனைப்போலவே (சங்.7:11),[29] பாவத்தின்மீதும் தீமையின்மீதும் கோபப்படுவது கிறிஸ்தவனுக்கு இருக்கவேண்டிய ஒரு குணாதிசயமாகவும் உள்ளது.[30] உண்மையில், இத்தகைய கோபத்துடன், தேவனுக்கும் அவருடைய பரிசுத்தவான்களுக்கும் எதிராகச் செயற்படும் மனிதரையும் ராட்சியங்களையும் தேவனே நியாயந்தீர்க்கட்டும் என்று அவரிடம் எதிரிகளைப்பற்றி செய்யும் முறைப்பாடாகவே மற்றவர்களைச் சபிக்கும் சங்கீதங்கள் உள்ளன.[31] இதனால்தான், கோப உணர்வுகள் வெளிப்படும் சங்கீதங்கள் அனைத்தும் ஜெபத்தில் தேவனிடம் பேசப்பட்ட வார்த்தைகளாகவே உள்ளன.

உண்மையில், “தேவபக்திமிக்க ஜனங்கள் தங்களுடைய வேதனைமிக்க அனுபவங்களைத் தேவனிடம் தெரிவிக்கும் ஜெபங்களாகவே கோப உணர்வுகளை வெளிப்படுத்தும் சங்கீதங்கள்

---

[25] J.Shephered, “The Place of the Imprecatory Psalms in the Canon of Scripture”, pp. 27-47, 119-120, 123. L.Silva, “The Cursing Psalms as a Source of Blessing” p. 223. உதாரணத்திற்கு யோவான் 15:25ல் சங்கீதங்கள் 35:19உம், 69:4உம், யோவான் 2:17ல் சங்கீதம் 69:9உம், அப்போஸ்தலர் 1:20ல் சங்கீதங்கள் 69:25உம், 109:8உம், ரோமர் 15:3ல் சங்கீதம் 69:9உம், ரோமர் 11:9-10ல் சங்கீதம் 69:22-23உம் உபயோகிக்கப்பட்டுள்ளன.

[26] மத்தேயு 5:44 அடிக்குறிப்பு இல:15ல் உள்ளது. ரோமர் 12:14ல், “உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்” என்றும், 1பேதுரு 3:9ல் “தீமைக்குத் தீமையையும், உதாசீனத் துக்கு உதாசீனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வா தத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[27] “அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசி யாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள் ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று... குமாரனி டத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்” (யோவா.3:18, 3:36)

[28] J.A.Motyer, *Psalms: New Bible Commentary*, p. 488.

[29] “தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்” என்பதை சங்கீதம் 7:11 அறியத்தருகின்றது.

[30] C.S.Lewis, *Reflections on the Psalms*, p. 30.

[31] J.C.Laney, “A Fresh Look at Imprecatory Psalms” pp. 35-45.

உள்ளன."[32] இதனால்தான், 137ம் சங்கீதத்தில், 7ஆம் வசனம் "கர்த்தாவே" என்றே ஆரம்பமாகின்றது. இதனால், இதனைத் தொடர்ந்து வரும் வசனங்கள் தேவனோடு பேசப்படும் வார்த்தைகள் என்பதை மறுப்பதற்கில்லை. 109ஆம் சங்கீதம் உபவாச ஜெபமாக இருப்பதை 24ஆம் வசனம் அறியத்தருகின்றது. எனவே, சங்கீதக்காரர்கள் தங்களுடைய எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கத்துடன் அதற்கான திட்டங்களை வகுத்தவர்களாக அல்ல, புண்பட்ட தங்கள் மன உணர்வுகளைத் தேவனிடம் தெரிவிக்கும் மனநிலையிலேயே இத்தகைய பாடல்களை எழுதியுள்ளனர்.[33] இதனால், மற்றவர்களைச் சபிக்கும் சங்கீதங்கள் தனிப்பட்டரீதியாக மனிதரைப் பழிவாங்கும் நடவடிக்கையாக அல்ல, மனக்குமுறலைத் தேவனிடம் தெரிவிக்கும் முறைப்பாடுகளாகவே உள்ளன.[34] இதனால், "பழிவாங்குவதும் பதிலளிப்பதும்" தேவனுடைய பிரத்தியேகமான செயல் என்பதையும் (உபா.32:35), தாங்கள் யாரையும் பழிவாங்கக்கூடாது என்பதையும் (லேவி.19:18)[35] நன்கறிந்திருந்த பக்தர்கள், தங்களுக்கு நேரிட்ட அநீதிகளைத் தேவனிடம் தெரிவிக்கும் ஜெபங்களாகவே இச்சங்கீதங்களை எழுதியுள்ளனர்.[36]

மற்றவர்களைச் சபிக்கும் வசனங்களைக் கொண்ட சங்கீதங்கள் அனைத்தும், பக்தர்கள் தங்களுடைய துயர நிலைபற்றி தேவனிடம் அழுதுபுலம்பும் மன்றாடுதல்களிலேயே உள்ளன.[37] இவை, துயரத்திற்கும், அநீதிக்கும், அக்கிரமத்திற்கும், அராஜகத்துக்கும் மத்தியில் சிக்கித் தவித்த பக்தர்களின் மனஉணர்வுகளிலிருந்து வெளிவந்த வார்த்தைகளாக உள்ளன.[38] எனவே, மற்றவர்கள் நமக்குச் செய்யும் தீமைகளினால் நாம் பாதிக்கப்படும்போது, அவர்களைப் பழிவாங்கும் விதத்தில் செயற்படாமல், சங்கீதக்காரரைப்போல, நம்முடைய உள்ளத்தின் கோப உணர்வுகள் அனைத் தையும் ஜெபத்தில் தேவனிடம் கொட்டிவிடவேண்டும்.[39] மனிதர்கள் பொதுவாகத் தங்களுடைய கோப உணர்வுகளை உள்ளத்திற்குள்ளேயே வைத்திருக்கின்றனர். இதனால், அவர்களுக்கு குறிப்பிட்ட நபர்மீது அல்லது குழுவின்மீது அல்லது இனத்தின்மீது, அல்லது ஜாதியின்மீது இருக்கும் கசப்பும் வெறுப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. பலர் குறிப்பிட்ட ஒரு நபர் அல்லது குழுவின்மீது இருக்கும் கோபத்தை வேறு நபர்களிடம் காண்பிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப் பங்களில் தனிப்பட்ட ஒரு நபர் மீது ஒருவருக்கு ஏற்படும் கோபம், அந்நபரின் முழுக்குடும்பம் அல்லது முழு இனத்தின்மீதுமே அவருக்கு வெறுப்பை ஏற்படுத்திவிடுகின்றது. ஆனால், சங்கீதக்காரர்கள் மற்றவர்மீது தங்களுக்கு இருந்த கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் மனிதர்களிடம் காண்பிக்காமல் ஜெபத்தில் தேவனிடம் வெளிப்படுத்தியுள்ளனர். ஏனெனில், உள்ளத்தில் இருக்கும் கோப உணர்வுகளை வெளியே கொட்டுவதற்கு ஜெபம் அவர்களுக்கு ஒரு சிறந்த வழிமுறையாக இருந்தது.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு எதிராகச் செயற்படுகிறவர்களைத் தேவனே நியாயந்தீர்ப்பவராக இருப்பதினால் (அப்.17:31),[40] அவர் அவர்களுடைய செயல்களுக்கு ஏற்ற பலனைக் கொடுக்கட்டும்

---

[32] H.C.Leupold, *Exposition of Psalms*, pp.18-19.

[33] J.A.Motyer, *Psalms: New Bible Commentary*, p. 488; C.C.Broyles, *Psalms: New International Bible Commentary*, p. 480.

[34] C.H.Bullock, *An Introduction to the OT Poetic Books*, p. 140.

[35] உபாகமம் 32:35ல் "பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது" என்றும், லேவியராகமம் 19:18ல் "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர் மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக நான் கர்த்தர்" என்றும் தேவன் தெரிவித்துள்ளார்.

[36] A.P.Ross, *Psalms: The Bible Knowledge Commentary – Old Testament*, p. 788.

[37] D.J.Estes, *HandBook on the Wisdom Books and Psalms*, p. 172.

[38] G.Pauls, "The Imprecations of the Psalmists: A Study of Psalm 54" pp. 75-86.

[39] J.R.W.Stott, *The Canticles and Selected Psalms*, pp. 11-12.

[40] "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக் கும் விளங்கப்பண்ணினார்" என்பதை அப்போஸ்தலர் 17:31 அறியத்தருகின்றது.

என்னும் எண்ணத்துடன் நமது மனஎழுச்சிகளை, கோப உணர்வுகளை மனிதர்களிடம் காண்பிக்காமல், அவற்றைத் தேவனுடைய பாதத்தில் கொட்டிவிடவேண்டும். இதனால்தான், “பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால்,[41] நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்” என்று ரோமர் 12:19 கூறுகிறது. அதாவது, நாம் எவரையும் பழிவாங்காமல், நமக்கு இழைக்கப்படும் அநீதிக்கும் உபத்திரவத்திற்கும் தேவனே தம்முடைய நீதியான தீர்ப்பை வழங்கட்டும் என்று அவரிடம் நம்முடைய வேதனைகளையும், கோபங்களையும் கொட்டிவிடவேண்டும். அப்பொழுது, மனிதர் நமக்குத் தீமை செய்தாலும், அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய மனநிலை நமக்கு ஏற்படும். அவர்கள் நம்மை அழிக்க முற்பட்டாலும் நாம் அவர்களை ஆசீவதிக்க நாடுவோம். உண்மையில், சங்கீதப் புத்தகத்திலுள்ள மற்றவர்களைச் சபிக்கும் சங்கீதங்கள், நமது கோபத்தை மனிதர்களிடம் காண்பிக்காமல் தேவனுடைய பாதத்தில் கொட்டிவிடும் பக்குவமான தன்மையை நமக்குக் கற்பிக்கின்றன.[42] எனவே, “மற்றவர்மீது நமக்கிருக்கும் கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் நாம் அவர்கள்மீது காட்டாமல், தேவனிடத்தில் அவற்றுக்கான பரிகாரத்தை நாடவேண்டும்.”[43]

இவ்வுலக வாழ்வில் மனிதர்கள் பொறாமையும், எரிச்சலும், குரோதமும், பகைமையும் உள்ளவர்களாக இருப்பதினால், பல சந்தர்ப்பங்களில் நமக்கு அவர்கள்மீது கோபமும் வெறுப்பும், கசப்பும் ஏற்படுகின்றது. இதனால், சங்கீதக்காரர்களைப்போலவே நாமும் அவர்களைப்பற்றி கடுமையாகப் பேசுகின்றோம். ஆனால், வேதாகமம் இதைத் தவறாகக் கருதவில்லை. இதனால்தான் சகலவிதமான கோபமும் தண்டனைக்குரியது என்று கூறாமல், “தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்” என்று இயேசுகிறிஸ்து மத்தேயு 5:22ல் தெரிவித்துள்ளார். ஏனெனில், சில சூழ்நிலைகளில் கோபம் நியாயமானதாகவும் அவசியமானதாகவும் உள்ளது.[44] இதனால், தேவனைப்போலவே நாமும் பாவத்தின்மீதும், தீமையின்மீதும், அநீதியின்மீதும் கோபப்படவேண்டும். “நாம் தேவனுடைய சாயலில்[45] சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினால் அவரைப்போல தீமையும் பாவமும் நம்மைக் கோபப்படவைக்கின்றது.”[46] இத்தகைய நியாயமானதும் நீதியானதுமான கோபத்தை வேதாகமம் பாவமாகக் கருதாததினாலேயே மற்றவர்களைக் கடுமையாகச் சபிக்கும் வார்த்தைகளைக் கொண்ட பாடல்கள் சங்கீதப் புத்தகத்தில் உள்ளன. எனினும், சங்கீதக்காரர்களைப்போல கோப உணர்வுகளை நாம் தேவனிடமே வெளிப்படுத்தவேண்டும். ஏனெனில், நம்முடைய கோபத்தை மனிதர்களிடம் காட்டுவது தவறாகவே உள்ளது. இது, நாம் தவிர்த்துக்கொள்

---

[41] உபாகமம் 32:35ஐப் பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டுகிறார். “கோபாக்கி னைக்கு இடங்கொடுங்கள்” என்னும் சொற்பிரயோகத்தில் கோபாக்கினையானது தேவன் அளிக்கும் ஆக்கினைத்தீர்ப்பாக உள்ளது (L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, p. 454).

[42] T.Longman III, *Psalms: Tyndale Old Testament Commentaries*, p. 52.

[43] C.H.Bullock, *An Introduction to the Old Testament Poetic Books*, p. 141.

[44] L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 114.

[45] “தேவனுடைய சாயல்” என்பது, சரீர உருவமோ தோற்றமோ அல்ல. ஏனெனில், தேவன் சரீரம் அற்ற ஆவியாகவே இருக்கின்றார். எனவே மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயல் சரீரம் என்று கூறுவது அர்த்தமற்றது. உண்மையில், மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயல் ஆவிக்குரிய அம்சங்களைக் கொண்டுள்ளது. அதாவது, தேவனுடைய சில ஆவிக்குரிய தன்மைகளும் குணாதிசயங்களும் மனிதனில் உள்ளன. குறிப்பாக நீதி, பரிசுத்தம், அறிவு, சிந்தனையாற்றல், உணர்ச்சி, போன்ற தன்மைகள் மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலின் அம்சங்களாகும். முதல் மனிதனான ஆதாம் தேவகட்டளையை மீறிப் பாவம் செய்தபோது, தன்னில் இருந்த தேவசாயலை முழுமையாக இழந்து போகவில்லை. ஆனால் அவனில் இருந்த தேவசாயல் கடுமையாக பாதிக்கப்பட்டு, சிதைவடைந்தது. தற்பொழுது மனிதர்கள் பாவத்தினால் பாதிக்கப்பட்ட தேவசாயலை உடையவர்களாக இருக்கின்றனர். இதனால் தான், ஆதாமின் வீழ்ச்சியின் பின்னர் மனிதனைப் பற்றி வேதாகமம் எழுதும்போது, அவன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவனாக இருப்பதாகக் கூறுகிறது (ஆதி.9:6, யாக்.3:9).

[46] D.Powlison, *Anger: Escaping the Maze*, p. 1.

ளவேண்டிய பாவம் என்றே வேதாகமம் கூறுகிறது (கொலோ.3:8, மத்.5:22).[47] மேலும், கோபத்தில் இருக்கும்போது, தூஷணமானதும் தரக்குறைவானதுமான வார்த்தைகள் நம்முடைய வாயிலிருந்து வரக்கூடாது (எபே.4:29).[48] இதனால்தான், ''நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்'' என்று வேதாகமம் அறிவுறுத்துகிறது (சங்.4:4, எபே.4:26). எனினும், மூலமொழியில் இவ்வசனம் சொல்லர்த்தமாக ''நீங்கள் கோபப்படுங்கள், ஆனால் பாவம் செய்யாதிருங்கள்'' என்றே உள்ளது.[49] இதனால், உங்களுடைய கோபத்தில் பாவம் செய்யாதிருங்கள் என்று இக்கட்டளையை நாம் மொழிபெயர்க்கலாம். உண்மையில், ''கோபப்படுவது பாவமல்ல. ஆனால், கோபத்தை எப்படி எவரிடம் வெளிப்படுத்துகிறோம் என்பதே நம்முடைய கோபம் பாவமானதா இல்லையா என்பதை நிர்ணயிக்கும்.''[50] உண்மையில், நம்முடைய கோபக்குமுறல்களை மனிதர்களிடம் காட்டுவதே பாவமாக உள்ளது. இதனால், சங்கீதக்காரர்களைப்போல நம்முடைய உள்ளத்தில் ஏற்படும் கோபத்தைத் தேவனிடம் மாத்திரமே நாம் வெளிப்படுத்தவேண்டும். இதனால், ''ஜெபம் மாத்திரமே கோபம் வெளிப்படும் ஊடகமாக இருக்கவேண்டும்.''[51] அப்பொழுது நம்முடைய கோபம் தணிவது மாத்திரமல்ல, கோபத்துடன் இருக்கும் நம் உணர்வுகள் தவறான வழிகளில் செல்வதற்கு இடம்கொடாதவர்களாகவும் நாம் இருப்போம்.

கோபப்படுவது பாவம் அல்ல என்றாலும், கோபம் நீண்டநேரம் நம்முடைய உள்ளத்தில் இருந்தால் அது நம்மைப் பாவமான வழிகளில் கொண்டுசெல்லும் என்பதை நாம் மறக்கலாகாது.[52] நாம் பாவிகளாக இருப்பதினால்,[53] நமக்கு ஏற்படும் கோபம் நீதியானதாக இருந்தாலும் கூட, அது தவறான வழிகளில் வெளிப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.[54] இதனால்தான், ''சூரியன் அஸ்தமிப்பதற்கு முன் உங்கள் எரிச்சல் தணியக்கடவது'' என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, நம்முடைய உள்ளத்தில் எழும் கோப உணர்வுகளை உடனடியாக நாம் தேவனிடத்தில் கொட்டிவிடவேண்டும். இதுவே, நம்முடைய கோபம் பாவமான செயல்களில் வெளிப்படுவதைத் தடுப்பதற்கான ஒரேயொரு வழியாக உள்ளது.[55] உண்மையில், மற்றவர்மீது நமக்கு ஏற்படும் கோபம், வெறுப்பு, கசப்பு போன்ற கடுமையான உணர்வுகளை மனிதர்களிடம் அல்ல, தேவனிடமே நாம் வெளிப்படுத்த வேண்டும் என்னும் மகத்தான சத்தியத்தை மற்றவர்களைச் சபிக்கும் வார்த்தைகளைக் கொண்ட பாடல்கள் நமக்கு அறியத்தருகின்றன. கோப உணர்வுகளை நம்முடைய உள்ளத்திலேயே நாம் அடக்கி வைத்திருந்தால், அது நம்முடைய சரீரத்தைப் பாதிக்கும். அவற்றை மற்றவர்மீது காண்பித்தால், அவர்களுக்கும் நமக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படும். ஆனால் தேவனிடம் அவற்றைக் கொட்டும்போது, நம்முடைய உள்ளத்தில் இருக்கும் கசப்பும், வெறுப்பும், கோபமும் நீங்கி, தெய்வீக சமாதானம் ஏற்படும். ''தேவன் நம்முடைய உள்ளத்தின் நிலையை அறிந்திருப்பதினால்

---

47 ''கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங் கள்'' என்று கொலோசெயர் 3:8 அறிவுறுத்துகிறது. மேலும், ''தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச்சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்'' என்று இயேசுகிறிஸ்து மத்தேயு 5:22ல் தெரிவித்துள்ளார்.

48 ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்'' என்று எபேசியர் 4:29 கூறுகிறது.

49 P.T.O'Brien, *Ephesians: The Pillar New Testament Commentary*, p. 339.

50 M.D.Dunnam, *Ephesians: The Preacher's Commentary*, p. 213.

51 P.D.Miller, *Interpreting the Psalms*, p. 151.

52 R.C.Sproul, *The Purpose of God: An Exposition of Ephesians*, p. 115.

53 பாவம் நிறைந்த இவ்வுலகில் நாம் பாவ சரீரத்துடனேயே வாழ்கின்றோம் (1யோவா.1:8, ரோ.7:14-20). பரலோகத்திலேயே நமக்கு பாவமற்ற சரீரம் கிடைக்கும் (1யோவா.3:2, பிலி.3:21, 1கொரி.15:51).

54 D.Powlison, *Anger: Escaping the Maze*, p. 2.

55 C.S.Lewis, *Reflections on the Psalms*, pp. 28-29.

(1சாமு.17:6),[56] நாம் எவ்வித தயக்கமுமின்றி நம்முடைய கோபத்தை அவரிடம் வெளிப்படுத்தலாம்.”[57] எனவே, கொந்தளிக்கும் நம்முடைய கோப உள்ளத்தின் கொடூரமான உணர்வுகளை நாம் கொட்டவேண்டிய ஒரேயொரு இடம் தேவனுடைய சமுகம் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. மற்றவர்மீது எத்தகைய கடுமையான கோபமும், வெறுப்பும் கசப்பும் ஏற்பட்டாலும், சங்கீதக்காரரைப்போல அவற்றையெல்லாம் ஜெபத்தில் தேவனிடம் கொட்டிவிட வேண்டும். அப்பொழுது நமக்கு எதிராகச் செயற்படுகிறவர்கள்மீது நமக்கு ஏற்பட்ட கோபம் நீங்கி, இயேசுகிறிஸ்துவின் அறிவுறுத்தலின்படி அவர்களை நேசிக்கவும், அவர்களுக்கு உதவிசெய்யவும் கூடிய மனநிலை உருவாகும். இதனால்தான், “ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள். அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள். தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார் (சங்.62:8) என்று கூறும் வேதாகமம், பின்வருமாறு அறிவுறுத்துகிறது:

> நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் (பிலி.4:6-7).

### ஆதார நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும்


Alston, W.M. ed., *Theology in the Service of the Church*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2000.
Broyles, Craig. C. *Psalms: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1999.
Bullock, C.Hassell. *An Introduction to the Old Testament Poetic Books*. Chicago: Moody Press, 1988.
Bullock, C Hassell. *Encountering the Book of Psalms*. Grand Rapids: Baker Book House, 2001.
Craige, Peter C. *Psalms 1-50: Word Biblical Commentary Volume 19.* Nashville: Thomas Nelson Publishers, 2004.
Day, John N. “The Imprecatory Psalms and Christian Ethics” in *Bibliotheca Sacra*. 159(2002), pp. 166-186.
Dunnam, Maxie D. *Ephesians: The Preacher’s Commentary*. Nashville: Thomas Nelson Publishers, 1982.
Eaton, John. *The Psalms: A Historical and Spiritual Commentary*. London: T&T Clark International, 2003.
Estes, Daniel J. *Handbook on the Wisdom Books and Psalms*. Grand Rapids: Baker Publishing Group, 2005.
Goldingay, John. *Psalms: Baker Commentary on the OT Wisdom and Psalms*.Grand Rapids: Baker Academic, 2006
Grogan, Geoffrey W. *Psalms: The Two Horizons Old Testament Commentary*. Grand Rapids: Eerdmans, 2008.
Kaiser, Walter C. *Hard Sayings of the Bible*. Downers Grove: Inter Varsity Press, p. 1996.
Kalas, J.Ellsworth. *Longing to Pray: How the Psalms Teach Us to Talk with God*. Nashville: Abingdon Press, 2006.
Knight, George A.F. *Psalms Volume 2: The Daily Study Bible*. Philadelphia: The Westminster Press, 1982.
Laney, J.Carl. “A Fresh Look at the Imprecatory Psalms” in *Bibliotheca Sacra*. 138 (1981), pp. 35-45.
Leupold, H.C. *Exposition of the Psalms*. Grand Rapids: Baker Book House, 1969.
Lewis, C.S. *Reflections on the Psalms*. London: Fontana Books, 1969.
Longman, Tremper & Enns, Peter. ed., *Dictionary of the Old Testament Wisdom, Poetry & Writings.* Downers Grove/Nottingham: Inter Varsity Press, 2008.
Longman, Tremper III, *Psalms: Tyndale Old Testament Commentaries*. Downers Grove: Inter Varsity Press, 2014.
Luc, Alex. “Interpreting the Curses in the Psalms” in *Journal of the Evangelical Theological Society*. 42 (1999), pp. 395-410.
Martin, Chalmers. “The Imprecations in the Psalms” in *Princeton Theological Review*. 1 (1903), pp. 537-553.
MacDonald, William. *Believer’s Bible Commentary*. Nashville: Thomas Nelson Publishers, p. 1995.
McKenzie, John L. “The Imprecations of the Psalter” in *American Ecclesiastical Review*. 111(1994), p.81-96.
Merrill, Eugene H. *Deuteronomy: The New American Commentary*. Nashville: Broadman & Holman, 1994.
Morris, Leon. *Matthew: Pillar New Testament Commentary*, Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.
Motyer, J.A. *Psalms: New Bible Commentary – 20th. Century Edition*. Leicester: Inter Varsity Press, 1994.


---

[56] “மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்” (1சாமு.20:6).
[57] J.W.Sire, *Thirsting for God: Exploring Prayer Through The Psalms*, p. 160.

O'Brien, Peter T. *Ephesians: The Pillar New Testament Commentary*, Grand Rapids: Eerdmans, 1999.
Pauls, Gerald. "The Imprecations of the Psalmists" in *Direction*. 22(1993), pp. 75-86.
Powlison, Daid. *Anger: Escaping the Maze*. Phillipsburg: P & R Publishing, 2000.
Ross, Allen P. *Psalms: The Bible Knowledge Commentary Old Testament*. Wheaton: Victor Books, 1985.
Ross, Allen P. *A Commentary on the Psalms Volume 1*. Grand Rapids: Kregel Publications, 2011.
Schaefer, Konard. *Psalms: Studies in Hebrew Narrative and Poetry*. Collegeville: The Liturgical Press, 2001.
Shepherd, John. "The Place of the Imprecatory Psalms in the Canon of Scripture" in *Churchman*. 111 (1997), pp. 27-47, 110-126.
Silva, Larry. "The Cursing Psalms as a Source of Blessing" in *Psalms and Practice: Worship, Virtue, and Authority*. ed. S.B.Reid. Collegeville: Liturgical Press, 2001.
Sire, James W. *Thirsting For God: Exploring Prayer through the Psalms*. Bletchley: Scripture Union, 2005.
Sproul, R.C. *The Purpose of God: An Exposition of Ephesians*. Fearn: Christian Focus Publications, 2002.
Stott, John R.W. *The Canticles and Selected Psalms*. London: Hodder & Stoughton, 1966.
Vos, Johannes G. "The Ethical Problem of the Imprecatory Psalms" in *Westminster Theological Journal*. 4 (1992), pp. 123-128.
Wright, Christopher, *Deuteronomy: New International Biblical Commentary*. Peabody: Hendrickson, 1996.
Zenger, Erich. *A God of Vengeance: Understanding the Psalms of Divine Wrath*. Louisille: John Knox Press, 1966.